முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான முதலிலே இங்கே தெரிவித்தபடி இப்போது 10 ஆயிரம் பேரை நியமிப்பதாக இருக்கிறோம். கூடிய வரையிலே அவர்களுக்கெல்லாம் தேர்வு வைத்து, தேர்ச்சி பெற்றவர்களை நியமிப்பதாக இருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி கிராமத்தில் இருக்கிற நிலச் சொந்தக்காரர்கள், நிலவுடைமையாளர்கள் வாங்குபவர்களும் விற்பவர்களும் அந்த அளவிற்கு விவரம் தெரியாதவர்கள் அல்ல. எவ்வளவு பத்திர எழுத்தாளர்கள் இருந்தாலும் யார் நன்றாக எழுதுகிறவர்கள் என்பது நடைமுறையிலே கிராம மக்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 552. மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

வினா எண் 553, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

553—

அரசினர் மேல்நிலைப்பள்ளிக்குக் கட்டிட வசதி.

348—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குப் போதிய கட்டிட வசதி இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் புதிய கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க துரித நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1991–92–இல் அந்தியூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு 3 வகுப்பறைகளை ரூ. 4.70 இலட்சம் செலவில் கட்ட அனுமதியளிக்கப்பட்டு, கட்டட வேலைகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்காக ஏராளமான பணத்தை ஒதுக்கி கொடுத்து கொண்டிருக்கிற நான் வணங்கி கொண்டிருக்கிற கடவுள் இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் 3 கட்டிடங்களைக் கட்டித் தருவதற்கு ஆவன செய்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருப்பதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, எங்களுடைய பகுதிக்கு இன்னும் இரண்டு கட்டிடங்களை அதிகம் கட்டுவதற்கு இந்த ஆண்டு போதிய நிதி வசதி இல்லை என்பதை தெரிந்து இருக்கிற காரணத்தால், அடுத்த ஆண்டாவது இன்னும் இரண்டு கட்டிடங்களைச் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? ஏனென்றால் ஏறத்தாழ 2014 மாணவர்கள் பயிலுகின்ற இந்தப் பள்ளிக்கூடத்தில் ஏறத்தாழ 4 வகுப்புகள் வெளியிலேமரத்தடியிலே வைத்துகொண்டுஇருக்கிறார்கள். ஆகவே அருள்கூர்ந்து அந்தக் கட்டிடங்களைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான நிதி வசதி இருக்கும்போது, இந்தப் பள்ளிக்கு மேலும் கட்டிடம் கட்ட வேண்டுமென்ற யோசனை பரிசிலிக்கப்படும்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பெரியார் மாவட்டத்திற்கு அருகிலுள்ள கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கல்வியிலே வல்லவர்; வல்லுனர். அவர்களுடைய நல்லாசி எங்களுக்கு எப்போதும் கிடைக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய நல்லாசியோடு அவர்கள் வருங்காலத்தில் செய்து தருவதாகச் சொல்லி உள்ளார்கள். அதற்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக அவர்களுக்கு நன்றியை சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 554, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

554—

பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்குக் கட்டிட வசதி

*5047—திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: